செய்தித் தாளாகப் பதிவு பெற்றது
வெள்ளிக்கிழமைதோறும் வெளி வருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.
பிரதி விலை: சதம் 15
ஆரம்பம் : விரோதி ௵ (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அ௳] யாழ்ப்பாணம்:- விரோதிகிருது ௵ ஆனி மீ ௧௧ உ வெள்ளிக்கிழமை (25-6-1971) [இல-௧௧

ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரியம்பாள் ஆலய அஷ்டபந்தன மகாகும்பாபிடேக வைபவத்தை முன்னிட்டு

# திருமுறை மாநாடு

## யாழ். நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக் கழக ஆதரவில் நிகழும்

திருவருளை முன்னிட்டு யாழ்ப்பாணம் நாயன்மார் கட்டு சைவ சமய அபிவிருத்திக் கழகம் சிறந்த முறையில் நாயன்மார்கட்டு ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி பேய்ச்சியம்பாள் ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து ௸ ஆலய உள் வீதியில் ஒரு திருமுறை மகா நாட்டை 29, 30-6-71 செவ்வாய், புதன் ஆகிய இரு தினங்களிலும் நடத்த ஒழுங்கு செய்துள்ளது. 12 திருமுறைகளைப் பற்றிய விரிவுரைகளும் திருமுறைப் பண்ணிசையும், இன்னிசை விருந்தும் "அம்பிகையைச் சரண் அடைந்தால் .... ...." எனும் பொருளில் கவியரங்கமும் கும்பாபிடேக மலர் வெளியீடும் இடம்பெறும். முதல் நாள் விழா ௸ ஆலய பரிபாலன சபை உபதலைவர் தலைமையிலும், 2-ஆம் நாள் விழா ௸ கழகத் தலைவர் தலைமையிலும் நிகழவிருக்கிறது. ௸ கோவில் மகா கும்பாபிடேகம் 30-6-71 (உத்தரத்தன்று) நிகழும்.

பல அறிஞர்கள் கலந்துகொள்ளும் திருமுறைவிழா தினமும் மாலை 5-00 மணிக்கு ஆலய வழிபாட்டுடன் ஆரம்பமாகும். மகா கும்பாபிடேக மலர் விலை 2-00. [க. சி]

# நடராசனர் வாழி

—"சொக்கன்"

[கடந்த ஈராண்டுகளாக அகில இலங்கைச் சேக்கிழார் மன்றச் சார்பில், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில், ஒவ்வொரு நோன்மதிக்கு அடுத்து வரும் நாள்தோறும், மன்றச் செயலாளர் பண்டித வித்துவான் க. கி நடராஜன் பி, ஓ எல், டிப் - இன் - எட் அவர்கள், பெரியபுராண வகுப்புக்கள் நடாத்திவருவது யாவரும் அறிந்ததே. கடந்த 23-6-71 புதன் கிழமை பிற்பகல் 5-30 மணியளவில், திருநாவுக்கரசர் புராண வகுப்புப் பூர்த்தி திரு அ நாகலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்) அவர்களின் உபயத்தில் ௸ பிரார்த்தனை மண்டபத்தில் மன்றத் தலைவர் ம. ஸ்ரீகாந்தா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்வமையம் முதலியார் செ முத்துத்தம்பி, திரு. க சொக்கலிங்கம் (துணைச் செயலாளர் அ. இ. சேக்கிழார் மன்றம்) ஆகியோர் வித்துவான் அவர்களின் பணியினைப் பலபடப் பாராட்டினர். 'சொக்கன்' அவர் மீது ஒரு வாழ்த்துப் பாட்லும் பாடினர். அப்பாடலையும் "சொக்கன்" இயற்றிய வேறு இரு பாடல்களையும் இங்குத் தருகின்றோம். [ஆசிரியர்]

(கட்டளைக் கலிப்பா)

சேக்கி ழார் அருள் சென்னி யிருத்திச்
செந்த மிழ்ச்சிவச் செந்நெறி போற்றி
வாக்கி னிற்கவி வன்மையில் ஓங்கி
வாழ்வை யேதிருத் தொண்டர்பு ராணம்
தேக்கு தேன்சுவை துய்ப்பதற் காக்கித்
தெளிந்த நல்லறி வுற்றவர் எங்கள்
ஆக்கநற் பணி யாளரென் றேத்தும்
ஆற்ற லார்நட ராசனுர் வாழி! (1)

சைவ நன்னெறி சாதனை செய்து
சஞ்ச லக்கடல் நீங்கிட வேண்டித்
தெய்வ பத்தியிற் றீவிர மானோர்
தேடி வந்திங்குக் கூடிடு வாரை
உய்வை எய்திடத் தொண்டர்பு ராணத்
துட்பொ ருள்களை நன்குவி ரித்து
நைவை அன்னவர் நெஞ்சினி லாக்கும்
நல்ல வர்நட ராசனுர் வாழி! (௨)

போகம் வேண்டிப் பொருள்செயல் வேண்டிப்
புன்மை செய்துபொ ழுதினைக் கொன்று
தேகங் காத்திடத் தீயன செய்வோர்
தெய்வ வாழ்வினை எய்திட மாட்டார்
ஆகம் ஆண்டவற் காக்கிய பேர்கள்
ஆங்குத் தெய்வங் குடிகொளக் காண்பார்
வேகம் நீங்குவர் என்ற புராணம்
விரிப்ப வர்நட ராசனுர் வாழி! (3)

உ
திருச்சிற்றம்பலம்

வேண்டத் தக்கது அறி
வோய் நீ, வேண்ட
முழுதும் தருவோய் நீ.
வேண்டும் அயன்மாற்கு
அரியோய்நீ வேண்டி
என்னைப்பணி கொண்டாய்
வேண்டி நீ யாது அருள்
செய்தாய், யானும்
அதுவே வேண்டின்
அல்லால்,
வேண்டும் பரிசு ஒன்று
உண்டு என்னில், அதுவும்
உன்தன் விருப்பன்றே.

திருச்சிற்றம்பலம்

—மாணிக்கவாசகசுவாமிகள்

## மாணிக்கவாசகர் குருபூசை

௸ குருபூசை யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாதரவில் 27-6 71 ஞாயிற்றுக்கிழமை சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். முற் பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணிவரை சிவபூசை நாவலர்மண்டபத்தில் நடராசர் பூசையும் புராண படனப திருவாதவூரடிகள் புராணம திருவடிபெற்ற சருக்கம் மாகேசுரபூசை.

காட்டுமலைக் கந்தன்

## புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டவிழா

அச்சுவேலி நாவலர்பதி காட்டுமலைக் கந்தசுவாமிகோவில் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் அடுத்த மாதம் 5-7-71 - இல் நிகழவிருக்கிறது. இக்கோவிலின் இரதோற்சவம் 7-7-71- இல் நிகழும். இரதோற்சவத்தை யொட்டி மலர்ஒன்றும் வெளியிடப்படும். தேரோடும் வீதியைச் செப்பனிடும் சிரமதான வேலையை வலிகாமம் கிழக்குக் காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை அவர்கள் கடந்த புதனன்று ஆரம்பித்து வைத்தார்கள்.

(நாயன்மார்கட்டு நிருபர்)

# பெரியபுராண வகுப்பு

## மக்கள் இன்னல்கள் நீங்கப் பெரியபுராணப்படிப்பு உறுதுணையாகும்

— திரு. ம. ஸ்ரீ காந்தா

23-6-71 புதன் கிழமை பி. ப. 5-00 மணியளவில் சேக்கிழார் மன்றத்தின் சார்பில் யாழ். இந்துக்கல்லூரிப் பிரார்த்தனை மண்டபத்தில் வித்துவான் க. கி நடராசன் அவர்கள் நடத்தி வருகின்ற பெரிய புராண வகுப்புத் தொடரில் திருநாவுக்கரசு நாயனர் புராணப் பூர்த்திப் பாடம் சிறப்பாக நடைபெற்றது. வகுப்பு முடிந்த பின்பு சேக்கிழார் மன்றத் தலைவர் திரு. ம. ஸ்ரீ காந்தா அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மக்களுடைய இன்னல்கள் நீங்க பெரிய புராணத்தை அவர்கள் பக்தி சிரத்தையுடன் கற்றல்வேண்டும். அப்பணியை நாட்டில் பரப்புவதற்கே சேக்கிழார் மன்றம் சென்ற இரண்டு வருடங்களாக இவ்வகுப்பினை நடத்தி வருகின்றது.

வித்துவான் க. கி. நடராஜன் B. O L இவ் வகுப்பினை நடத்துவதற்கு மிகவும் பொருத்தமானவர். தமிழ் வடமொழி ஆங்கில அறிவு நிரம்பியவர். அவருடைய மாமனார் உரையாசிரியர் நவாலியூர் ஸ்ரீ தம்பையா உபாத்தியாயரிடம் பாடங் கேட்டவர். எல்லாவற்றுக்கும் மேலாக கொழும்புத்துறை ஸ்ரீ யோகர் சுவாமிகளுடைய ஆசியையும் அருளையும் நிறைவாகப் பெற்றவர்" எனத் தலைவர் கூறினர்.

"தமிழ்மக்கள் தவத்தினுல் இன்பமாய் வாழலாம். இப்பெரியபுராண வகுப்பு தவத்துக்கு உறு துணையாகவுள்ளது. மக்கள் பெருந்தொகையாக இவ்வகுப்பில் சேர்ந்து கற்றல் வேண்டும்" என சைவபரிபாலன சபை உப தலைவர்களு ளொருவராகிய முதலியார் திரு செ.முத்துத்தம்பி அவர்கள் குறிப்பிட்டதுடன் திரு நடராசனுடைய தொண்டினைப் பாராட்டி விரிவான சொற்பொழி வாற்றினுர்கள்.

திரு. க. சொக்கலிங்கம் [சொக்கன்] அவர்களும் திரு. இரத்தினம் அவர்களும் பாராட்டுரை வழங்கினுர்கள்.

## முனேஸ்வரத்தில் கோடி அர்ச்சனை

ஈழநாட்டில் கோடி அர்ச்சனை நடாத்த வேண்டுமெனும் கருத்தைப் பரப்பிய பெருமை ஸ்ரீ வடிவாம்பிகா சமேத முன்னநாத சுவாமி தேவஸ்தானத்தாருக்கே உரியதாகும்.

௸ ஆலயத்தில் விசேட பூசைகள் மகாயாகங்கள் ஆகியன 29-3-71 ஆரம்பித்து நடைபெற்று வருகின்றன. இது எதிர்வரும் 7.7-71-ல் பூர்த்தியாகவுள்ளது.

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஹு ஆனி மீ கக-உ வெள்ளிக்கிழமை [1971]

## அறங் காப்பான் திருவடி என் தலைமேலாம்

ஒரு பேரரசன் ஒரு சிவாலயத்தை அமைத்து அதனுடைய நித்திய நைமித்திகங்கள் சிறப்புற நடைபெற நிலம் முதலிய சர்வ மான்னியங்களைக் கோயிலுக்குத் தருமஞ் செய்து தான் இறக்கு முன் ஒரு தூணை நிறுவி அதில் மேலே காணும் வாக்கியத்தைப் பொறித்து வைத்தான். அந்த அரசன் அவ்வாலயம் தன்னுலமைக்கப்பெற்றதென்றதை உலகுக்குப் பகிரங்கஞ் செய்ய விரும்பவில்லை. தன்னுடைய சந்ததிக்கு அத்திருப்பணியின் பேரால் புகழையீட்ட அவன் விரும்பவில்லை. அத் தருமம் எக்காலமும் தான் கருதியவண்ணம் நடைபெறவேண்டுமென எண்ணினன். அவனுக்குப் பின் எதிர் காலத்திற் கோவிலை நிருவகிக்கும் கடமையை ஏற்பவர்கள் தான் நிறுவிய தூய நோக்கத்தின்படியே கோவில் நிருவாகம் நடைபெறவேண்டுமென்பது அவனுடைய நோக்கம். எதிர் காலத்தில் கோயில் காப்பவர்களுடைய திருவடியைத் தன் தலைமேல் வைப்பதாக ஷெ வாக்கியததிற் காட்டியுள்ளான்.

ஒரு திருப்பணியை நிறுவுகின்றவர்கள் தங்களுக்குப் பின் தங்கள் திருப்பணி கருதியவண்ணம் நடைபெறுமா? நடைபெறாதா? என்ற அச்சம் உண்டாவது இயல்பு. அதற்காக அவர்கள் கட்டுப்பாடுகள் அமைந்த சாதனங்களை எழுதி வைப்பார்கள். ஷெ தருமங்களை அவர்களுக்குப் பின் நடத்த வருகின்றவர்கள் தாபகர்களுடைய நோக்கத்தை நிறைவேற்றுதல் பெரும் தருமமாகும்.

நமது நாட்டிற் பல ஆலயங்கள் உண்டு. அவற்றினது நித்திய நைமித்திகங்களையும் சைவ சமயப் பணிகளையும் புரிதற்கு முன்னோர்கள் நிலங்களைத் தருமசாதனஞ் செய்திருக்கின்றார்கள். ஒரு கோவிலுக்குச் சொந்தமான தருமங்களின் வருவாயைக் கொண்டு அக் கோவிலின் நித்திய நைமித்திகங்களை முறைப்படி செய்விப்பதே உரிமைக்காரரின் மேலாய கடனாகும். அவை செவ்வனே நடக்கின்றனவா வென்று ஆராய்வது அரசாங்கத்தின் கடமையுமாகும் பிழைகள் நிகழ்ந்தால் அரசாங்கம் அப் பிழைகளைத் திருத்துதல் வேண்டும்.

இக் காலம் அரசாங்கம் கோவில் நிலங்களை வீடற்றோர்களுக்கு வீடுகட்டவுதவவும் அரசாங்கவேலைத் தலங்கள் நிறுவுவதற்கும் சுவீகரிக்கின்றது. அவ்வாறு சுவீகரிக்கப்படுகின்ற நிலங்களுக்கு அரசாங்கம் சொத்துக்களை உரிமையாகவுடைய கோயில்களுக்குப் பெறுமதியான நிதியுதவுதல் வேண்டும் அவ்வாறு செய்தல் கோவில்களைத் தாபித்தவர்களுடைய கருத்துக்கிணங்க நிருவகிக்க உதவியாகவிருக்கும். அவ்வாறு செய்யத் தவறினால் ஆலயங்கள் அழிந்துவிடும். நமது நாட்டில் இன்றும் பல கோயில்கள் கோயிற் சொத்துக்களின் வருவாயைக் கொண்டே நடைபெறுகின்றன.

ஆற்றரு நோய்மிகும் அவனிமழை குன்றும்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்க ளானவை
சாற்றிய பூசைக டப்பிடிற் றானே.

இலங்கை அரசாங்கம் பௌத்த சாதனத்தையும் பௌத்த சமயத்தையும் பௌத்த சங்கத்தையும் பாதுகாக்க வாக்களித்துள்ளது. அதேபோல இந்து சமயக் கோயில்களையும் சொத்துக்களையும் குருமார்களையும் பாதுகாத்தல்வேண்டும். குருமாரின் தகுதியிலேயே சமயம் தங்கியிருக்கின்றது. குரு வகுப்பு உயர்ந்தால் சமயமும் உயரும். குரு வகுப்புத் தாழ்ந்தால் சமயமும் தாழும். குரு வகுப்பினருடைய நலனைப் பாதுகாத்தல் சைவ மக்களதும் அரசாங்கத்தினதும் முக்கிய கடனாகும். கோவில்களை மூல நோக்கங்களுக்கு அமைவாக நிருவகிக்க அரசாங்கம் முன் வருதல் வேண்டும். இது பெரும் அறமாகும்.

## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்கோவில் திருவிழா

ஷெ திருக்கோவில் வருடாந்த மகோற்சவம் 24-6-71 ஆரம்பமானது. தேர்த்திருவிழா 7-7-71 லும் தீர்த்தத் திருவிழா 8-7-71 லும் தெப்பத் திருவிழா 9-7-71 லும் நிகழும். அவசரகால நிலைமையை முன்னிட்டுப் பகல் திருவிழா 8 மணிக்கும 12½ மணிக்கும் இராத் திருவிழா பி. ப 5 மணிக்கும் 9 மணிக்குமிடையில் நிகழும்.

### அன்னதான சபை

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்கோயில் அன்னதான சபையினர் 1970-ஆம் ஆண்டு சாதாரண வருஷ திருவிழாக்காலத்தில் நடைபெற்ற வரவு செலவுக் கணக்கு திருத்தமான முறையில் புத்தக ரூபமாக வெளியிட்டுள்ளனர். அன்னதானச் சபையார் இவ் வருடமும் விசேஷமுறையில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்குவார்கள்.

## கந்தபுராண வாச்சியார்த்த ஆராய்ச்சி

பண்டிதர், சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம்
தும்பைநகர், பருத்தித்துறை.

முன் வளர்ச்சி —2

இனி, நிகழ்ந்தன நிகழத்தக்கன எனவுங் கொள்ளக்கிடத்தலாலும், உருவகமேயென்பதனை வலியுறுத்தும் ஏதுக்களெவுதும் பெறப்படாமையாலும் உருவகம் செய்தே உயிர்க்கு எதனையுமுணர்த்த வேண்டுமென்னும் நியதியின்மையாலும் உருவகமாயமைந்த கதையே என நிச்சயித்தற்கும் வலியின்றாம். நிகழ்ந்தன, நிகழத்தக்கன எனக் கொள்ளக்கிடப்பன அனைத்தும் கொள்ளப்பட்டே முடியும் என்னும் நியதியின்மையாலும், உருவகம் அன்று என்பது துணியப்படாமையாலும், பிரபோத சந்திரோதயம் ஆதிய நூல்கள்போல உருவகம் செய்தும் சிலவற்றை உயிர்க்கு உணர்த்த வேண்டுதலும் உளதாம். ஆதலாலும் பிறவற்றாலும உருவகம் அல்ல என்பது துணிதற்கும் இடமின்றாம். இங்ஙனமே கற்பனையா? அன்றோ? என்பனவும் ஒன்று துணிதற்கு இடம் பெறாதனவாகவே முடியும். ஆகவே, எத்திறத்தால் நோக்கினும் குறித்த மூன்றனுள் இதுவென ஒன்றைத் துணிதல் அரிதாகவே முடியும்.

இவை இங்ஙனமாகப் பரவித்தை அபரவித்தையாகிய எத்திற நூல்களாலும் முடிவில் மக்கள்பெறும் பயனாய் உள்ளது பிரபஞ்ச உண்மையை உணர்ந்து இறைவன்றொழுது இறைவனோடு கலந்து அழியாவின்பத் தமர்தலாகவே முடியும். ஆதலின், நிகழ்ந்த சரிதத்தைக் கொண்ட நூலேயாயினும் சமயக்கோட்பாட்டையனுசரித்து அதற்குச் சாதகமாக நடைபெறாதாயின், அது சமய நூலெனக் கொள்ளப்படமாட்டாது. உருவகத்தால் அல்லது கற்பனையாலமைந்த நூலேயாயினும் அது சமயககோட்பாட்டை யனுசரித்து நடப்பதாயின், அது சமய நூல் எனவே கொள்ளப்படும். இவ்வாற்றால், கைக்கொள்ளும் புராணங்களைச் சமய நூற்குச் சாதகமானவையாய் நடப்பனவா என்றுமாத்திரம் ஆராய்தல் முறைமையாம். இங்ஙனமின்றி நிகழ்ந்ததா? உருவகமா? என்றிவ்வாறு விசாரித்து மலைவுறல் பயனின்றாம். அவசியகமுமின்றாம்.

இன்னும் ஒரோவழி ஒன்று துணிதல் வேண்டுமேயாயின், உண்மையாய் நிகழ்ந்த ஒரு செயலுக்கு ஆதாரமெதுவும அகப்பட்டிலதாயினும், அஃதுண்மையாய் நிகழ்ந்ததேயாமன்றி நிகழாததாகாது இவ்வாற்றால் சூரபன்மன் பிறந்தது முதலாய நிகழச்சிகள் பலபல கற்பங்களுக்கு முன்னர் நிகழ்ந்த ஏகதேச செயல்களாகக் கூறப்படுதலின், அவை உண்மை நிகழ்ச்சிகளாகவும், அவற்றிற்குச் சரித நூலகளேயன்றி வேறு ஆதாரமெதுவும் அகப்படுதல் இயலாததாமாகலின், வேறு ஆதாரஙகள் அகப்படாதளவாயுமிருத்தல் கூடுமாதலாலும், நிகழ்ந்தனவாகக்கோடற்கு முரணென்றுமிலதாமாதலாலும், பல நூல்கள் நிகழ்ந்தனவாகவே அநுசரித்து வருதலாலும மேறபோந்தவாறு விசாரித்து நிற்போர்க்கும் நிகழ்ந்தனவாகக் கோடலே மன எழுச்சியைத் தருவதாமாதலாலும், இன்னோரன்ன பிறவற்றாலும் சூரனுதியர் பிறந்து தேவராதியாரை வருத்தியது. முதலாக விரிந்த செயல்கள் உண்மையாக நிகழ்ந்த நிகழ்ச்சிகள் எனவும், அண்டபிண்டமிரண்டின் அமைவு நிகழ்ச்சிகள் தம்முளொக்குமியல்பினுல், தத்துவப் பொருள் தொனிப் பொருளாய்ப் போந்த பொருள் எனவும கொள்ளல் அமையும் போலும். (வளரும்)

## சைவபரிபாலன சபை நால்வர் கோயிற் றிருப்பணிநிதி

| | ரூபா சதம் |
|---|---|
| முன் வரவு | 479-00 |
| திருவாளர்கள்: | |
| வ. சுப்பிரமணியம் | 10-00 |
| தி. நாகராசா | 5-00 |
| ஆ. கணபதிப்பிள்ளை | 3-00 |
| க. இ பஞ்சாட்சரம் | 2-00 |
| வ. வ. கணேசமூர்த்தி | 2-00 |
| கு. பத்மநாதன் | 4-00 |
| வி சிவராமலிங்கம் | 3-00 |
| மு சிவசங்கரநாதன் | 2-00 |
| மு. ஈஸ்வரபாதம் | 5-00 |
| து. செல்லத்துரை | 4-00 |
| ஆகக் கூடியது | 519-00 |

குறித்த திருப்பணி போதிய நிதி இன்னும் சேராமையினல் தாமதிக்கப்பெற்றிருக்கின்றது. அன்பர்கள் தங்கள் தங்களாலியன்ற நிதியை எமககுக காலதாமதமின்றி அனுப்பித் திருப்பணியைப் பூர்த்தி செய்ய உதவி புரிவார்களாக. நிதி உதவுகின்றவர்கள் பெயர் இந்துசாதனத்திற் பிரசுரிக்கப்பெறும்.

திருமதி. ம அருணசலம்
தனதிகாரி
நால்வர் கோவிற்றிருப்பணிச்சபை
சைவபரிபாலன சபை
யாழ்ப்பாணம். 26-6-71

### நாவலர் நல்வாக்கு

பாவத்துக்கு அஞ்சிப்பொருள் சம்பாதித்து, பெரியோர்களுக்கும் வறியவர்களுக்கும் பகிட்டு, நீயும் உண்ணு.

### ஒரு எறியில்...... இரு பழங்கள் ?



பக்தர்: "சரித்திரப் பிரசித்தி வாய்ந்த நாயன்மார் கட்டுக் குளத்தை ஆழமாக்கி அணைச் சுவர் கட்டி, 'விவசாயம்' செய்யவும், 'நீச்சற்றடாகமாக' உபயோகிக்கவும், வழி செய்ய வேண்டும்" அப்பிடீன்னு யாழ். மாநகர சபையில் திரு. என். மார்க்கண்டு அவர்கள் கொணர்ந்த ஒரு பிரேரணை ஏகமனதாக நிறைவேறியிருக்கிதுங்க!

சித்தர்: "ரொம்ப ரொம்ப பாராட்டவேண்டிய சமாச்சாரம் பாருங்க, பெருந்தொகையான விவசாயிகளுக்கு நல்ல பயனைக்கொடுக்ககூடியதிட்டம்; நீச்சறறடாகத்துக்கு ஏற்றசிறப்புக்களெல்லாங் கொண்டது; 'ஒரு எறியில் இரு பழம' விழுத்தியிருக்கிறார்கள்; இரு பகுதியினர் தேவை நிறைவுபெறும்; நல்லூர் முருகப்பெருமான் தீர்த்தவிழாநிகழ்ந்த குளமென்றால் அதன் புனிதம் எத்தகையது?

"நாயன்மார் - நாதன்"

### இந்துசாதனம்
திருத்திய வருடசந்தாவிகிதம்

| உள்நாடு | |
|---|---|
| ஆங்கிலம் | 10-00 |
| தமிழ் | 10-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 15-00 |
| **வெளிநாடு** | |
| ஆங்கிலம் | 12-00 |
| தமிழ் | 12-00 |
| ஆங்கிலம் - தமிழ் | 18-00 |

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல: 10884

கரணவாய் வடக்கு, வயித்திலிங்கம் சரவணமுத்து —வழககாளிகள்

எதிராக

1. கரணவாய் வடக்கு, மாணிக்கம் இருஷ்ணசாமி 2, பெண் இலட்சுமிப்பிள்ளை, 3. சுப்பர் இருஷ்ணபிள்ளை, 4. கந்தையா கணபதிப்பிள்ளை 5. பெண் நல்லம்மா, 6. சின்னத்துரை நடராசா, 7. பெண் செல்லம்மா, 8. சிவகுரு கந்தவனம், 9. பெண் புவனேஸ்வரி, 10 அருணி கந்தையா, 11. பெண் கதிராசி, 12 முருகேசு சோமசுந்தரம், 13 கந்தையா வல்லிபுரம், 14. பொலிகண்டி சண்முகம் மகள் வள்ளிப்பிள்ளை 15, கரணவாய் வடக்கு குமாரசாமி நடராசா 16. பெண் ஞானம்பிகை 17. அல்வாய் குறிச்சி சண்முகம் சின்னத்தம்பி 18. பெண் நாச்சிப்பிள்ளை 19 வேலுப்பிள்ளை இருஷ்ணபிள்ளை —எதிரிகள்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று கரணவாய் இளகாமக் குறிச்சியிறை சத்தியம் செய்தபுலம் நீ பர 15, 1/8 ஷை தோட்டம் 1 என்னும் ஆதனம் 1951-ம் ஆண்டின் 16-ஆம் இலக்கப் பிரிவடுதற்கட்டளைச்சட்டத்திற்கமையமேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்காலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1970-ம் ஸ்ரீ புரட்டாதி மீ 23 உ 10 மணிககுச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டு இவ் வழக்கு 1971 ம் ஆ ஆடி மீ 9 ஆம் உ மேற்படி கோட்டால் கூப்பிடப்படும்.

கோட்டாரின் கட்டளைப்படி

C Varithamby

பிரதம லிகிதர், சக்கிடுத்தார்.

1971ம் ஸ்ரீ ஆனி மீ 19 உ

எம். 114 25-6-71

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல: 11208

வல்வெட்டி தற்காலம் இங்கிலாந்து சின்னத்தம்பி கதிர்காமலிங்கம் — வழக்காளி.

எதிராக

1. வல்வெட்டி சின்னத்தம்பி பொன்னுத்துரை மகள் மகேந்திரராணி, 2. C. சின்னத்துரை 3. பெண் சின்னம்மா 4. ஏரம்பு மகள் பொன்னுக்கண்டு 5. வேலுப்பிள்ளை மயில்வாகனம் 6 பெண் சுந்தரம்மா —எதிரிகள்.

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோயிற்பற்று வல்வெட்டி இறை கம்பன் கலட்டி நீ பர 5 குளி 1, 2/3 என்னும் ஆதனம் 1951-ஆம் ஆண்டின் 16-ஆம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலககத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்குத் தொடர்ந்திருக்கின்றதென்று இத்காலுமக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1971 ம் ஸ்ரீ ஆனி மீ 10 உ 10 மணக்குச சமுகமளிக்கும்படி கட்டளைபண்ணப்பட்டிருக்கிருர்கள். மேற்படி வழக்கு 1971 ம ஆ ஆடி மீ 16 ம் திகதி மேற்படி கோட்டில் கூப்பிடப்படும்.

கோட்டாரின் கட்டளைப்படி

C. Varithamby

பிரதமலிகிதர் சக்கிடுத்தார்.

1971 ம் ஸ்ரீ ஆனி மீ 27 ம் உ

M 115 25-6-71.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M, B. 10781

1 இராமு கந்தசாமியும் 2 பெண் சுசீலாதேவியும் இருவரும் சுளிபுரம் —வழக்காளிகள்

எதிராக

1 அம்பிகைபாகர் ஆறுமுகமும்
2 பெண் இராசம்மா என்னும் இராசலெட்சுமியும்
3 முத்து கந்தையா, தொல்புரம். [இருவரும் சுளிபுரம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10781ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இருதுண்டுககாணிகளை 1971-ம் ஆண்டு ஓகஸ்ற் (ஆவணி)மீ 7-ம் திகதி (7—8—71) சனிககிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் முறையே 1. 2ம் காணிகளுக்குள் னின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபாய் 4950/-ம், 28-4-69 தொடக்கம் 21—8—70 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் இறுக்குவரை முழுத்தொகைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 414-75 சதமும்

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுளிபுரம் இறை "வறுத்தாலை" வரகுச் செப்கை கிலப்பரப்பு 15 (Lms. V, C.) வடலிகளும் எல்லை கிழக்கும் வடக்கும் ஒழுங்கை, மேற்கு கந்தவனம் தம்புவும் பெண் அன்னமுத்துவினதும் காணி. தெற்கு விசுவலிங்கம் கைம்பெண் தங்கமுத்துவினதும், கார்த்திகேசர் ஆசைப்பிள்ளையினதும் காணிகள். இது யாழ்ப்பாணம். பதிவு இல. E.243/151

2) மேற்படி சங்கானைக் கோவிற்பற்று தொல்புரம் இறை "ஒல்லைத்தலைவாசல்" வரகுச் செய்கை கிலப்பரப்பு 1 - 4½ குளியும் (1 LMS. 4½ KLS. V C) புதுக் கல்வீடும், வான் செய்பயிர்களும், எல்லை கிழககு கணபதிப்பிள்ளை ஆறுமுகத்தின் காணி வடக்கு M. கந்தையாவும் பெண் இரத்தினத்தினதும் காணி, மேற்கு வேலு சின்னத்தம்பியின் காணியும் ஒழுங்கையும், தெற்கு கணபதிப்பிள்ளை ஆறுமுகமும் கோவிந்தர் சூரியரினதும் உரிமையாளரினதும் காணிகளுககுப் பாவிப்புக்காகச் சொந்தக் காணியில் விடப்பட்ட கையொழுங்கை இது முழுவதும் கிணற்றில் ஐந்தில் ஒரு பங்கும்.

க. சரவணமுத்து

173, குருசோவீதி சுண்டிக்குளி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளா

யாழ்ப்பாணம். 13-6-71 எம் 122 25-6-7.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம மாவட்டக் கோடு

செல்லப்பா திருநாவுக்கரசு, சங்கானை மேற்கு, —வழக்காளி

வழ. இல: M B 9011 எதிராக

1 முருகர் நாகலிங்கம் அவரது மனைவி
2 இலட்சுமி இருவரும் சுழிபுரம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டின் M B 9011 இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இருதுண்டுக்காணிகளை 1971ம் ஆண்டு யூலை(ஆடி)மீ 9ம்உ (9-7-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்தஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3850/-ம், 18-4-67 தொடக்கம் 1—8—69 வரைக்கும் ரூபாய் 2500/-கரு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 347/-

ஆதன விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சுழிபுரம் இறை 'வெளைப்புலம்'' வயற்பரப்பு 7½ம் எல்லை கிழக்கு அம்பலவாணர் இருஷ்ணரதும் பங்குதாரர்களினதும் ஆதனம், வடககு மாரிமுத்துவின் கைமபெண் இலட்சுமியின் ஆதனம், மேற்கு நடராசாவினது மனைவி நாகம்மாவினதும் சரவணமுத்து முருகேசுவினதும் ஆதனம், தெற்கு சின்னவரது கைமபெண சின்னப்பிள்ளையின் ஆதனம், இத்துடன் தென்மேற்கு எல்லையிலுள்ள கிணற்றில். பங்கும், வழிவாய்க்காலும், யாழ்ப்பாணம் காணிப்பதிவேட்டின் பதிவு இல. E 352/14

2 மேற்கூறியபடி சுழிபுரம் இறை ''நுணுக்கம்புரை'' கிலப்பரப்பு 2ம் குளி 3ம் இத்துடன் பனை மரங்களும் கிணற்றில் பங்கும் எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு விநயமூர்த்தியினது மனைவி கண்மணியினதும மற்றவர்களினதும் ஆதனம், மேற்கு பொன்னம்பலம் கணபதிப்பிள்ளையினது ஆதனம், தெற்கு கதிர்காமரது கைம்பெண் சிவகாமியினது ஆதனமும். கையொழுங்கையும யாழ்ப்பாணம். காணிப்பதிவேட்டின் பதிவு இலககம் E 352/15

க, சிவஸ்கந்தா

நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்.

மதிப்பாளரும்

நாகேந்திரமடம்,

வட்டுக்கோட்டை. 18 7-61, M 119. 25—6—71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1, செல்லையா மகேசன் 2. அவரது மனைவி தவமணி
No; 20, 1-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம். —வழக்காளி

வழ: இல. M B 10615 எதிராக

1. சுப்பிரமணியம் திருநாவுக்கரசு
2. பெண் மனோன்மணி, 15, நாயன்மார் வீதி. நல்லூர் —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10615ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக்காணியை 1971ம் ஆ ஆடி மாதம் 23-ந் திகதி (23-7-71) வெள்ளிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3100-00க்கும் 19—2—69 தொடககம் 25—7—69 வரைக்கும் ரூபாய் 2000-00கரு வருஷம் ஒன்றுககு 14 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுககும்வரை 100க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 297-60ம், இதில் ரூபாய் 500-00 கொடுபட்டுள்ளது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை 'பிக்கைப்புளி வளவு' பர. கில. இலா. 1 குளி 15 கொட்டில்களும் தென் கிழககு எல்லையில் உள்ள கிணற்றில் பங்கும் பயிர்களுடனும் இதற்கு எல்லை கிழக்கு பொன்னுச்சாமி பெண் பாககியத்துக்குரிய ஆதனம், வடக்கு

## கோட்டு விற்பனவு விளம்பரம்

நாகநாதர் சுப்பிரமணியம் — தாவடி வழக்காளி

வழ. இல: M B 10838 எதிராக

கந்தையா இராசையாவின் கைம்பெண் அன்னபூரணம் கொக்குவில் மேற்கு கொக்குவில் தானுகவும் தனது காலஞ்சென்ற கணவர் கந்தையா இராசையாவின் ஆதனத்தின் சட்டபூர்வமான பிரதிநிதி — கொக்குவில். —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10838-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ஆம் ஆண்டு ஆடி-மீ 17-ம் திகதி [17-7-71] சனிக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2985/- 26-5-69 தொடக்கம் 3-12-69 வரைக்கும் ரூபா 1,500/-க்கு 12 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 307/54 சதம். இறைக்க வேண்டிய தொகை ரூபா 500/ —

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் மேற்கிறை வாழைத்தோட்டமும் வாழைத் தோப்பும்'' இதன் நிலபரப்பு 1½ ம் மேற்குக் காணிக்குத் தெற்கில் 4 முள அகலமான பாதைப்பங்கும் எல்லை கிழக்கு கனகர் பொன்னம்பலம் செல்லையாவின் ஆதனம். வடக்கு செல்லையா பெண் அன்னப்பிள்ளையின் ஆதனம். மேற்கு பற்குணம் பெண் சரோஜாதேவியின் ஆதனம். தெற்கு K பொன்னம்பலம் செல்லையாவின் ஆதனம் D 270/82 ன் கீழ் பதியப்பட்டது.

வே. கோபாலபிள்ளை

22. ஆஸ்பத்திரி வீதி, கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

யாழ்ப்பாணம். 12-6-71 எம் 113 28—6—71.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

நாகலிங்கம் இராசை கரும்பிராய் வடக்கு வழக்காளி

வழ இல: M B 10792 எதிராக

கந்தன் சீனியன் தம்பாபிள்ளை (காலம் சென்றவர்) கந்தன் சீனியனது கைம்பெண் சின்னப்பிள்ளை தம்பாபிள்ளை காலஞ்சென்றவரின் சொத்துக்குச் சட்டப்படி நியமிக்கப்பட்ட பிரதிநிதி)

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10792-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் துண்டுக காணி 1971-ம் ஸ்ரீ ஜூலை மீ 18-ம் திகதி (18-7-71) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்,

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1043-83-ம் 9-5-69 தொடக்கம் 6-8-1970 வரைக்கும் ரூபா 600 க்கு 10 வீத வட்டியும் அதன் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 320-74,

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலி கோவிற்பற்று தம்பாலை இறை 'வறவன் புலம்'' நிலப்பரப்பு 10 இதின் வடக்குப் பக்கமாக அரைவாசி நிலப்பரப்பு 5-ம் செய் பயிர்களும் வான்பயிர்களும் வீடும் கிணறும் எல்லை கிழக்கு ஞேட்டு வடக்கும் மேற்கும் சிதம்பரி கந்தனுக்குரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை இதடங்கலிலுங் சொரியலாக அரைவாசி. பதிவு யாழ்ப்பாணம் K. 216/296.

க. சிவஸ்கந்தா

நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்

நாகேந்திரமடம், மதிப்பாளரும்,

வட்டுக்கோட்டை. 11-6-71 எம். 120 25.6-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ. இல: M B 8172

காரைநகர் நெடுங்காடு, தம்பிப்பிள்ளை வாமதேவன் —வழக்காளி

எதிராக

1. இளையதம்பி குமாரவேலு, காரைநகர் வடக்கு. தற்போது C. T. O கொழும்பு
2. குமாரவேலு பெண் இராசலெட்சுமி, காரைநகர் வடக்கு,
3. கந்தையா அருணுசலமும் பெண்
4. சிவஞானம், காரைநகர் வடக்கு. காரைநகர். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 8172-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ஆம் ஆண்டு ஆடி மாதம் 17-ம் திகதி (17—7—71) சனிக்கிழமை முற்பகல்10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 6300/-ம். 16-5-66 தொடக்கம் 20-10-67 வரைக்கும் ரூபாய் 5000/- க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 340-59 இதில் கொடுபட்டது ரூபாய் 6559-12 கோட்டுச் செலவால் ரூபாய் 340-59

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி வலந்தலை தற்பொழுது காரைதீவு வடக்கு கோயிற்பற்று காரைதீவு இறை "இலகடி" பர. கில. இலா. 8 பனைகள் இளையதும் முதிர்ந்ததும் வான்பயிர் செய்பயிர்களும் வீடும் கிணறும் இதற்கு எல்லை கிழக்கும் தெற்கும் ஒழுங்கை, மேற்கும் வடக்கும் சண்முகம் மகாதேவாவுக்குமுரிய ஆதனம், இதில் சொரியலாக பர. கில. இலா 2 இதடங்கலும் பதிவு இல: C. 321/140

நா. ஸ்ரீ இரங்கநாதன்,

கொமிஷனரும், விலைமதிப்பாளரும்

20 பெருமான் கோவில் வடக்கு ஒழுங்கை,

யாழ்ப்பாணம், 5-6-71. எம். 111, 28-6

R. கதிரவேலுவின் உருத்தாளிகட்கும் பங்காளருக்குமுரிய ஆதனம், மேற்கு ஒழுங்கை; தெற்கு கனகரத்தினம் பெண் மரகதத்துக்கும், முதலாம் எதிரிக்குமுரிய ஆதனம்.

ப. நா தருமலிங்கம்

167/1 கோயில் வீதி, கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

யாழ்ப்பாணம், 15-6-71 எம். 118 24-6-71

## அடிக் கல் நாட்டுதல்

பழைய திருக்கேதீச்சர நாதர் கௌரிஅம்பாள் ஆலய புனருத்தாரண வேலைகள் எதிர்பார்த்ததற்கு முன்னரே சிரமதான முறையில் நடைபெற்று விட்டன. ஆகையால் அடிக்கல் நாட்டு விழா யூலை 14-ஆம் திகதிக்கு முற்போடப்பட்டுளளது. ந. ஙி.

## பிரிவிடுதல் நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில்

இல: 11210

சமரபாகு ஆழ்வான் கிட்டினர் —வழக்காளிகள்

எதிராக

1. சமரபாகு சின்னவன் இளையவன், 2. இராமன் கதிரன், 3. கரணவாய்வடக்கு, அம்பலவி முருகேசு, 4. பெண் பொன்னம்மா, 5. சினிவாசகம் பேரின்பநாயகம், 6. பெண் விக்கினேஸ்வரி, —எதிரிகள்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று இமையாணன் குறிச்சியிறை குருததடி வி. பர. 19 குளி 7, 26/32 என்னும் ஆதனம் 1951-ஆம் ஆண்டின் 16-ஆம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தாலு மக்கறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1971-ம் ஆண்டு ஆனி மீ 10-ம் திகதி 10 மணிக்குச் சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

மேற்படி வழக்கு 1971ம் ஆ. ஆடி மீ 16ம் திகதி ஷெ கோட்டில் கூப்பிடப்படும்.

கோட்டாரின் கட்டளைப்படி
C. Varithamby
பிரதம லிகிதர்/சக்கிடுத்தார்

17-6-71 எம். 116 25-6

## COMMISSION SALE

### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ இல: 10676

தொண்டைமானாறு
1. இளையதம்பி இராசையாவும்
2. பெண் மாணிக்கமும்
வழக்காளிகள்

எதிராக

தொண்டைமானாறு தற்காலம் கிராமசேவகர் குடைத்தனை
1. ஏகாம்பரம் பரமநாதரும்
2. பெண் வள்ளிநாயகியும்
எதிராளிகள்

மேற் சொல்லிய இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைதத கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படு மாதனம் 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 29-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் குறித்த காணியிடமாக விருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டி கோயிற்பற்று தொண்டைமானாறு இறை நியாயாவளவு விடு 2 ஷெ. விலப்பரப்பு 4½ ஷெ விலப்பரப்பு 3½ இவைகளில் விலப்பரப்பு 2 குளி 1⁶, 7/8 இது 11-11-1942-ல் உலாந்தாமேஸ்தர் க. வேல்முருகுவால் 1950-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டதும் பருத்தித்துறை றெக்குவேஸ்துக் கோட்டின் 1605-ம் இலக்க வழக்கில் அணைக்கப்பட்டதுமான படத்தின்படி 1, 2, 3, 4 என அட்சரமிடப்பட்ட துண்டுகளாகவிருக்கிறது. இதன் விசாலம் விலப்பரப்பு 2 குளி 9, 25/32, இதில் 2-ம் நம்பர்த துண்டுக்கு குளி 11, 57/128ல்நீள்ல்லைகிழக்கு எதிரிகளுக்குடைய வாதனம் வடக்கு மாணிக்கம் கைம்பெண் இலட்சுமியம்மாவுக்குடைய வாதனம். மேற்கு ஒழுங்கை தெற்கு வீரசிங்கம் பெண் கிறேசம்மாவுக்குடைய வாதனம் இவ்வெல்லைக்குட்பட்ட கிலம் கல்விடு குசினி, கிணறு கக்கூசு மற்றும் பயிர் வகைகள் அடங்கிலும் பதிவு A 8/290.

| | | |
|---|---|---|
| 23-10-60 வரை முதல் வட்டி | ரூபா. | 6137-50 |
| ரூபா 4000-க்கு 23-10-69 தொடக்கம் 24-2-70 வரை 15 வீதவட்டி | ரூபா | 200-00 |
| ரூபா 6337-50க்கு 24-2-70 தொடக்கம் 24-9-70 வரை 5 வீதவட்டி | ரூபா | 221-00 |
| மொத்தம் | ரூபா | 655[illegible]-50 |
| 25-11-70-ல் கொடுபட்ட தொகை | ரூபா | 1000-00 |
| | | 5558-50 |

செலவு கணக்கு பார்க்கவில்லை

V. M. கந்தசாமி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
வல்வெட்டித்துறை

27-4-71 எம். 42 3-6-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பண்ணாகம் தெற்கு கைலாசபிள்ளை கைம்பெண் அன்னலெட்சுமி —வழக்காளி
வழக்கு இல. M. B. 10110

எதிராக

மூளாய்
1. சுப்பன் கணபதி (காலஞ்சென்ற 2-வது எதிரி முருகேசுவின் ஆதனத்துககு தானுகவும் சட்டப்படியும் பிரதிநிதி)
2. சின்னவன் அப்புத்துரை (காலஞ்சென்ற 3-வது எதிரி சின்னவன் சபாபரயின் ஆதனத்துககு தானுகவும் சட்டப்படியும் பிரதிநிதி)
3. சின்னவன் அப்புத்துரை பெண் நாகம்மா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10110-ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 25-ந் திகதி (25-7-71) ஞாயிற்றுக்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத் தொகை: ரூபா 1875/ம் 26-6-68 தொடக்கம் 5-4-69 வரைக்கும் ரூபா 1500/-க்கு 10 வீத வட்டியும் அதன்பின் முழுத் தீர்வைத் தொகைக்கும் பணம் முற்றுக இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 465-60 சதமும். இவற்றில் ரூபா 800/- கட்டப்பட்டுள்ளது.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி சங்கானை கோயிற்பற்று, மூளாய் இறை "குமரன் புலம்" (KUMARAN PULAM) விலப்பரப்பு 4 குளி 2 1/2 இதில் கிழக்குப் பக்கத்தால் வி. ப 3 சின்னட்டியன் நன்னியனின் மேற்கெல்லைக் காணியிலிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் தூர்வையிலும் பொதுவாகவுள்ள 2, 1/2 குளி காணியடியால் விடப்பட்ட வழி வாய்க்காலில் உரிமையும். எல்லை கிழக்கு வெள்ளையன் கிருஷ்ணனின் ஆதனம். வடக்கு ஒழுங்கையும் வேலன் சுப்பனின் ஆதனமும்: மேற்கு சின்னட்டியன் நன்னியன் காணியில் மீதிப் பங்கு, தெற்கு தூர்வைக்கும் வழி வாய்க்காலுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள பொதுககாணி, இதடங்கலும் E 392/100-ல் பதியப்பட்டது

2. ஷெ மூளாய் இறை. "குமரன் புலமும் நமட்கிரியு" (Kumaranpulam and [illegible]amatkeeri) விலப்பரப்பு 4 குளி 7 இதில் தெற்குப் பக்கத்தில் வி. ப 2 தவிர மீதியாகவுள்ள வி. ப 2 குளி 7-ம் கிணற்றில் அரைப் பங்கும் செய்பயிர் வான்பயிரும். எல்லை கிழக்கு இலகுப்பிள்ளை கைம்பெண் கதிரமலையின் காணி வடக்கு ஒழுங்கை. மேற்கு கையொழுங்கை. தெற்கு சின்னவனும் பெண் முதகிக்குமுரிய காணியில் மீதிப்பங்கு. இதடங்கிலும் அத்துடன் மேற்கிலுள்ள கையொழுங்கை பாவிப்புரிமையும் E 392/101-ல் பதியப்பட்டது.

மல்லாகம்.
17-6-71
எம், 112-28-6

செ. பாண்டித்துரை
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
Commissineor of Sales & Values

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் வழ: இல M B. 10452

1. சரவணை நடராசா வீமன்காமம் தெள்ளிப்பழை —வழக்காளி

எதிராக

1. வேலுப்பிள்ளை முருகேசு
2. Mrs முருகேசு சுபத்திரை இருவரும் அன்னசத்திரம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 10452-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1971-ம் ஆ. ஆடி மாதம் 29-ம் திகதி வியாழக்கிழமை (29-7-71) முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபாய் 19,025/00 ம் 24-11-68 தொடக்கம் 15-7-69 வரைக்கும் ரூபாய் 12,000/00 க்கு நூற்றுக்கு பத்து வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை நூற்றுக்கு ஐந்துவீத வட்டியும், கோட்டுச் செலவு ரூபாய் 531-70 ம.

ஆதன விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை இறை "கட்டைத் தோட்டம் இக்கிலடைப்பு வன்னியன் வளவு தற்புருஷன் வளவு". பர. நில. இலா. 2. (v. c.). கல்வீடும் கிணறுடனும்.

இதற்கு எல்லை, கிழக்கு- ஒழுங்கை, வடக்கு- இராமு, வல்லிபுரத்துக்கும் பெண் சின்னாச்சிக்கும் உரிய ஆதனம், மேற்கு- குலசேகரம்பிள்ளை பொன்னுசுவாமிக்கு உரிய ஆதனம், தெற்கு- சின்னத்துரை பெண் வள்ளியம்மைக்கு உரிய ஆதனம். இது அடங்கலும் பதிவு இலக்கம். D 246/244.

167/1, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம். 21-6-71

ப. நா தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்,
எம். 38 25-6-71

## பாடசாலை நாட்கள்

யூலாய் 1ம் தேதியிலிருந்து பாடசாலைகள் 5½ நாட்கள்தான் கடமையாற்றும். பெற்றூர்களதும், பெரியார்களதும் கருத்திற்கிணங்க இம் மாற்றம் உண்டானது.

## பிழை திருத்தம்

சென்ற 18-6-71 இல் வெளிவந்த இந்துசாதனத்தில் கொமிஷனர் வே. கோபாலபிள்ளையவர்களால் வெளியிடப்பெற்ற வழ. இல. எம். பி. 11030 இலக்கமுடைய கோட்டுவிற்பனவுவிளம்பரதில் தீர்வைத்தொகை என்னும் பகுதியில் முதல்வட்டி ரூபா 7,550/-க்கு ரூபா 7,500 என்றும் கோட்டுச் செலவு ரூபா 495-55 சதத்திற்கு ரூபா 449-55 சதம் என்றும் தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. இத் திருததத்தைச் சேர்த்து வாசிக்கக்கோருகின்றோம்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்: M B 8724

1. சரவணை தம்புவும் 2 சீனிபபிள்ளையும்
இருவரும் வண்ணார்பண்ணை கிழக்கு, யாழ்ப்பாணம்.

எதிராக

1. வைரவன் குட்டியும் 2. பெண் கண்மணியும
இருவரும், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் — எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 8724-ம இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி1971-ம் ஷூ ஆவணி மீ 4-ம உ. (4-8-71) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- முதல் வடடி ரூபாய் 8265-00 சதமும் 4-1-67 தொடக்கம் 6-8-68 வரைக்கும ரூபாய் 7250/-க்கு 12 வீத வடடியும அதன்பின் இறக்குமவரை 5 வீத வட்டியும கோட்டுச்செலவு ரூபாய் 306-52 சதமும் கோட்டுச் செலவில் கொடுபட்ட ரூபாய் 150/- குறைக்கப்படும். மேலும் கொடுபட்ட ரூபாய் 2000/- ம் குறைக்கப்படும்.

ஆதன விபரம

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை "நறுவிலிய வளவு" வரகுச்செய்கை நிலப்பரப்பு 4ம், 5 குளியும், வீடும், அடுக்களையும், பனைகளும், தென்னைகளும், மற்றும் செய்பயிரும் வான்பயிரும் மேற்கெல்லைக் காணியின் கிணற்றுப் பங்கும். எல்லை கிழக்கு இராமு பெண் வள்ளியம்மையினதும் செல்லப்பா கனகரத்தினத்தினதும் ஆதனங்கள், வடக்கு செல்லப்பா அருளானந்தத்தினதும் பெரியதம்பி பெண் தெய்வானையினதும் ஆதனங்கள், மேற்கு சிங்கராயர் பாக்கியநாதனதும் பங்காளர் இளையதம்பி செல்லப்பாவினதும் கந்தையா பெண் தங்கம்மாவினதும் ஆதனங்கள், தெற்கு ஒழுங்கையும், இராமு பெண் வள்ளியம்மையினுடைய ஆதனமும, மேற்குக் காணியிலுள்ள கிணற்றின் தனிப்பட்ட பாவிப்புரித்தும் கிழக்கெல்லைக் காணிக்குரிய வாயக்காலுரித்தும், யாழ்ப்பாணப் பதிவு இலக்கம்: D. 320/110

173, குருசோ வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். 29-6-71

க. சரவணமுத்து
கொமிசனர் & விலைமதிப்பாளர்
எம். 121 25-6-71

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இலக்கம்: M B 11920

காரைதீவு வடக்கு, காரைநகர்
அருணாசலம் தம்பிப்பிள்ளை —வழக்காளி

எதிராக

காரைதீவு வடக்கு, காரைநகர். ஆறுமுகம் பரமனுதர் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11920-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகள் 1971-ம் ஷூ ஆவணி மீ 19-ந் திகதி (19-8-71) முற்பகல் 10 மணிக்கு முதலாம் காணியும், முற்பகல் 10-30 மணிக்கு இரண்டாம் காணியும், முற்பகல் 11 மணிக்கு மூன்றும் காணியும் முறையே அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 3056/- இன்னும், ரூபாய் 1800/- 10-8-70 தொடக்கம் 22-12-70 வரைக்கும் 18 வீத வட்டியும் அதன்மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 269-04 சதம்.

ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பிரிவு காரைதீவு கோவிற்பற்று காரைதீவு வலந்தலை:

1. "சடையவி" பர. நில. இலா. 10-0 பனைகள். வடலிகள், செய்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு சிவகாமிப்பிள்ளையினுதனம், மேற்கு கந்தையா பெண் ஐ. பூரணத்தினுதனமும், ஒழுங்கையும், வடக்கு கையொழுங்கை, தெற்கு கனகர் பெண் மங்களத்துக்கும் கந்தையா பெண் சிவகாமிப்பிள்ளையினுதனங்கள். வடக்கெல்லை ஓரமாக மேற்கெல்லைக் காணிக்குச் செல்லும் நாலடி நடை பாதையும், மேற்கெல்லைக் காணியும் புறநீங்கலாக மிகுதியடங்கியவையில் பிரிவிடப்படாத முழுப்பாகத்தில் பிரிவிடப்படாத அரைபாகம்.

2. "சடையவி" பர. நில. 10½ பனைகள், வடலிகள், தென்னைமரங்களுடன் இதற்கெல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை பெண் சின்னப்பிள்ளையினுதனம், வடக்கு தரையப்பா பெண் முத்தாச்சியினுதனம், மேற்கு ஆறுமுகம் அருணாசலத்தினுதனம், தெற்கு ஒழுங்கை, இதடங்கலில் பிரிவிடப்படாத ½ பங்கு

3. "காட்டுப்புளியன் குளமும் கூனன் பருத்தியும்" பர. நில. இலா. 6-0 பனைகள், வடலிகள், செய்பயிர்களுடன் இதற்கெல்லை கிழக்கு கந்தர் பெண் தெய்வானையினுதனம், வடக்கு கணபதிப்பிள்ளை கந்தையாவினுதனம், மேற்கு கணபதிப்பிள்ளை கந்தையாவுக்கும் சுப்பிரமணியம் பெண் நாகமுத்துவிற்குமுரிய வாதனம், தெற்கு சுப்பிரமணியம் ராமகிருஷ்ணனுக்குமுரிய ஆதனம், இதடங்கலில் பிரிவிடப்படாத கால் பங்கு

133 பருத்தித்துறை றோட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்,
22-6-71

செ. விசாகரெத்தினம்,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
எம். 123 25-6-71

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாசயந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 18—6—1971 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்